இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை–34.

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்

(மின்னஞ்சல் மூலம்)

ந.க.எண். 84441 / 2021 எம்3 நாள் 16.12.2021

அய்யா/அம்மையீர்,

பொருள்: நிலம்–திருக்கோயில் மற்றும் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நன்செய் / புன்செய் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டது–கேட்பு, வசூல், நிலுவை–கேட்பு சரிசெய்தல்–நிலுவை தொகையை வசூல் செய்தல் குறித்து அறிவுரை வழங்குதல்–தொடர்பாக

பார்வை: இவ்வலுவலக கடிதம் ந,க,எண். 54464 / 2011 எம்3 நாள் 01.03.2012

-------

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்கள் மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான நன்செய் / புன்செய் போன்ற இனங்களில், குத்தகை பாக்கி பல பசலிகளாக (பல ஆண்டுகளாக) வசூல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது. அதற்கான காரணம் கோரும்போது, அவை உழவடை செய்யும் குத்தகைதாரர்களிடமிருந்து மற்றும் திருமடங்களுக்குச் சொந்தமான நன்செய் / புன்செய் போன்ற இனங்களில், குத்தகை பாக்கி பல பசலிகளாக (பல ஆண்டுகளாக) வசூல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது. அதற்கான காரணம் கோரும்போது, அவை உழவடை செய்யும் குத்தகைதாரர்களிடமிருந்து (Cultivating tenant) வர வேண்டிய பாக்கி தொகை எனவும், இந்த பாக்கிக்கு அவர்கள் செலுத்த வேண்டிய தானிய வகைகள் செலுத்தப்படவில்லை எனவும், இது தொடர்பாக வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு

தொடரப்பட்டு நிலுவையில் இருப்பதாகவும் தெரியவருகிறது. மேற்படி பொருண்மை தொடர்பாக வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள வழக்குகள் விவரம் குறித்தும், அவற்றின் மூலம் வரவேண்டிய நிலுவை பாக்கித் தொகை எவ்வளவு என்பது குறித்தும், விரிவான அறிக்கையினை கீழ்க்காணும் படிவத்தில் பூர்த்தி செய்து அனுப்பிட அனைத்து சார்நிலை அலுவலர்களையும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| மாவட்ட பெயர் | வட்டத்தின் பெயர் | குத்தகைதாரர் பெயர் | சர்வே எண், | குத்தகை விஸ்தீர்ணம் | எந்த தேதி முதற்கொண்டு குத்தகைக்கு உள்ளனர் | செலுத்த வேண்டிய மொத்த நெல் குத்தகை (குவிண்டால்) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |

| இதுவரை வசூல் செய்த குத்தகை | நிலுவை நெல் குத்தகை விவரம் (குவிண்டால்) | வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள வழக்கு எண். | வழக்கின் தற்போதைய நிலை | தற்போதைய கணக்கீட்டின்படி நிலுவை தானியத்திற்கு பதிலாக ரொக்கமாக செலுத்த வேண்டிய ரொக்க குத்தகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| (8) | (9) | (10) | (11) | (12) |

நிலக் குத்தகைதாரர் என வகைபாடு செய்யப்பட்ட இனங்களில் வரவேண்டிய நிலுவைத் தொகை தானியமாக தான் பெறப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இன்றைய தேதியில், பெரும்பாலான நேர்வுகளில், திருக்கோயில் சார்பாக தானிய குத்தகை பல வருடங்களாக வசூல் செய்யப்படுவதில்லை. ஆனால் அதற்கான பாக்கி வசூல் செய்யும்போது ஒவ்வொரு திருக்கோயிலிலும் ஒவ்வொரு விதமாக, ஒரே சீரான நடைமுறை பின்பற்றாமல் பழைய பசலிக்குரிய ஆதார விலையினை எடுத்துக் கொண்டு வெவ்வேறு முறையில் நிர்ணயம் செய்து நிலுவை தொகையை கணக்கிடுகின்றனர்.

மேலும், குத்தகை பாக்கிக்காக வருவாய் நீதிமன்றத்தில் அறநிறுவனங்கள் சார்பில் வழக்கு தொடுக்கும்போதும் ஒரே சீரான நடைமுறையை பின்பற்றாமல் பழைய பசலிக்கான ஆதார விலையே கணக்கில் எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் குத்தகை நிலுவைத் தொகை அறநிறுவனங்களால் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறாக தானியமாக குத்தகையை செலுத்த தவறிய குத்தகைதாரர்கள் நிலுவை தொகையினை செலுத்த முன்வரும்போது அதனை செலுத்திட பழைய பசலிக்கான ஆதாரவிலையை கணக்கில் எடுத்துக் கொண்டு அதனடிப்படையில் நிலுவை குத்தகை தொகையை

Verified RealEstate™

அறநிறுவனங்கள் கணக்கிடும்போது, இதனால் அறநிறுவனங்களுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு அரசால், தானியத்திற்கான ஆதாரவிலையை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்டு வருகிறது. அதன்படி நடப்பு பசலியான 1431–க்கு நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.2,038/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, இனிவரும் காலங்களில் தானிய குத்தகை செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ள இனங்களில், தானியத்திற்கு பதில் ரொக்கமாக செலுத்த விரும்பினால் குத்தகைதாரர்களிடமிருந்து அந்தந்த பசலியில் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட தானிய ஆதாரவிலையினை அடிப்படையாகக் கொண்டு தானிய குத்தகைக்கான ரொக்கத் தொகையினை அறநிறுவனங்கள் முடிவு செய்து பாக்கி தொகையை வசூல் செய்திட வேண்டுமெனவும், தானிய குத்தகை செலுத்தாத இனங்களுக்காக வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும்போது அறநிறுவனங்களால் மேற்கண்ட விவரப்படியே குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து அறநிறுவனங்களின் நிர்வாகிகள் / செயல் அலுவலர்களுக்கு தெரிவித்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்./–ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

16/12/2021

கண்காணிப்பாளர்

16.12.2021

Verified RealEstate ™